உ

சிவமயம்.



# பேரின்பத் தேன்

கலைமகள்

— இயற்றியது —

1955

நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்.

# பேரின்பத் தேன்

க லை ம க ள்

— இயற்றியது —

1955

நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

குறிப்பு:

சமூகத்தில் சமய நெறி கடந்து சினிமாப் பாடலை ரசித்து சித்தத்தை சிதறடித்து உள்ளத்தை உருக்கு லைத்தலையும் ரசிகர்கட்கும், பெரியோர்முதல் சிறுவர் உலகிற்கும் உபயோகமாகும் பொருட்டு எவரும் ரசித்து சுவைக்கத் தகுந்த இன்னிசையான மெட்டு களில் இன்பந் தரும்,

# பேரின்பத் தேன்

என்ற இச்சிறு நூலை அச்சேற்றி வெளியிட அடியாள் ஆவல்கொண்டேன். நாமகளினதும், கதிர்காம வேல னதும் திருவருள் பெற்ற இப் புஸ்தகத்தை எவரும் படித்து பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் மிகக் குறைந்த விலையிலேயே விற்பனையாகிவர நான் முயற்சி எடுத்துள்ளேன். பேரின்பத் தேனின் விலைக் குறைவிற்கு உதவிய யாழ்ப்பாணம், நாவலர் அச்சக கத்தார் அவர்கட்கு எமது நன்றிகள் என்றும் உரிய தாக. வேண்டுதலான பக்திப் பிரார்த்தனையுடன் வெளிவரும் பேரின்பத் தேன் மக்கள் உள்ளத்தைக் கவரும் என எதிர் பார்ப்பதுடன், பக்தி மார்க்கத்தி லும் விசுவாசத்திலும் மனம் திரும்புவார்களென நம்புகின்றேன். வணக்கம்.

**கலைமகள்.**

எச்சரிக்கை:

இதிலுள்ள பாடல்கள் எதையும் பிரதி பண்ண வோ, றெக்கோட் செய்யவோ விரும்பும் ரசிகர்கள் அச்சகத்தின் மூலமாக இயற்றியவரிடமிருந்து உத்த ரவு பெற்றுக்கொள்ளவும்,

# மதிப்புரை.

உ

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணி பதம் நாடு.

திருவருளை முன்னிட்டு சிவநேசச் செல்வர்கள் யாவரும் படித்து இன்புறும் வண்ணம் கலைமகள் அவர்கள் "பேரின்பத்தேன்" என்னும் இவ்வரிய புத்தகத்தில் பேரின்பத்தை அடையக்கூடிய திருப்பாடல்களையும், வசனங்களையும் சேர்த்து வெகு திறமையுடன் இயற்றப்பட்டிருப்பதைக் குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அன்பர்கள் யாவரும் இவ்வரிய நூலைப் படித்து முத்தி இன்பம் அடைவீர்களாக.

இங்ஙனம்,
**க. வைத்தியலிங்கம்,**
அதிபர்,
நாவலர் அச்சுக்கூடம்,

யாழ்ப்பாணம்.
15—10—55

அநாதி நமோ நம
சரஸ்வதி துணை.

# பேரின்பத் தேன்

சரஸ்வதி வணக்கம்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர் விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள் 'என்' உள்ளத்தில் என்றும்
இருப்பளிங்கு வாரா திடர்.

அறுமுகன் வணக்கம்.

நீயே கதியென்று நின்னடி பணிந்தேன்
கதிர்காம நாதனே சக்தி வடி வேலனே
என் பெருங் குறைகள் நீக்கி ஈடில்லா மிடிகள் போக்கி
அணைத்தெனை ஆண்டருள் செய் அப்பனே முருகா நீயே.

தேவாரம்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகும் திருச் சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடனம் செய்கின்ற பூங்கழல் போற்றி
ஓம் சாந்தி. [போற்றி.

## பிரார்த்தனே.

மண்ணேடு மண்ணுக மக்கி உக்கிப் போகும் இந்த உடலுக்கு உயிரூட்டிய பெருமானே! உம்மைக் காண நான் ஆசைப்படுகின்றேன். உன்னைத் தேடி உன் படைப்பின் உலகெல்லாம் அலைகின்றேன். கண்ணில் தென்படும் கல்லையெல்லாம் உன் உருவமென்று கட்டியணைக்கின்றேன். தூணிலும், துரும்பிலும் உனது துணை வேண்டி அழுகின்றேன். எல்லிலும், இருட்டிலும், எவர் நடுங்கும் எம சாயத்திலும் உன்னை ஏங்கி யழைக்கின்றேன்.

பெருமானே! உனது இயற்கை ஓவியமான படைப்பின் சிருஷ்டிகள் எல்லாம் எனக்கு அதிசயமாகத் தோற்றுகிறது. வானத்தில் காணும் உன் சிருஷ்டியான சந்திர சூரியனை எங்கும் நிறைந்த நீரென்று நம்புகின்றேன்.

சர்வ வியாபகனே! பாவப் படுகுழிகளிலே என்னை வீழ்த்தி வேடிக்கை பார்க்காதேயும். அகங்காரத்தில் என் இதயம் ஆழ்ந்து விடாதவாறு காத்தருளும். கோபத்திற்கு என் இதயத்தைப் பறிகொடுத்து, கொடுமையான பாவங்களையும், கொலைகளையும் செய்யவிடாது தூய வழியில் என்னை வழிநடத்தி யருளும். பெற்றோரைக் கனம் பண்ணவும், பெரியோருந் கெதிர் பேசாதிருக்கவும், அவர்களின் அன்பிற்கும், உனது ஜோதிமயமான அருளுக்கும் என்னை நித்திய அடிமையாக்கி யருளும்.

என் ஜோதியே! ஐந்தெழுத்தென்ற அருபனே! உலக பாவங்களில் இருந்து என்னை மீட்டு, மாயையான வாழ்வின் பந்தங்களில் இருந்து விடுதலை செய்து, உனது பேரின்பத் தேனை எனக்குத் தினமும் தந்து பாதுகாத்துக்கொள்ளும்.

ஓம் என்ற நாதத்தின் உட்பொருளே! என் உள்ளத்தை தூய்மை செய்தருளும். உமது சிருஷ்டிகள் எல்லாம் உம்மை சிவனே! பெருமாளே! பிதாவே! யேசுவே! புத்தரே! அல்லாவே! நபியே! நாயகமே! என்றெல்லாம் அழைக்கின்றார்கள், அடிபணிகின்றார்கள், ஆராதிக்கின்றார்கள். நான் உம்மை அழைக்க வழிதெரியாது அல்லல்படுகின்றேன், உன் திருவிளையாடல்கண்டு வியக்கின்றேன். மீண்டும் அந்தாரத்தில் என்னை ஆழ்த்தி சோதனை செய்யாதேயும். பஞ்சம், படை, கொள்ளை நோய்களால் என் ஆத்மா அழிந்துவிடாது பத்திரப்படுத்தி யருளும்.

மூன்றெழுத்தின் முழுச் சுடரே! உனது உயிரோவியமான சிருஷ்டிகளிலே என்னையோர் உத்தம மானிடப் பிறவியாக்கினீர். இந்தப் பிறவியின் பயனை உன் மூலமாக என் நெஞ்சில் துலக்கியருளும்.

நான் அறிந்தும் அறியாமலும் இதுகாறும் செய்த பெரும் பாவங்களை மன்னித்து என்னைக் காத்தருளும். இனிமேலும் நான் பாவப் படுகுழியில் விழுந்து கடலின் அலையாகாது என்னை ஆதரித்தருளும். என் மனதிலே படிந்துள்ள வேண்டாத இருளைப் போக்கி நான், எனது என்ற அகந்தைகளை அகற்றி உமது மெய்யான ஜீவ ஒளியை எனக்குக் காட்டி உமது பொன்னடியிலே என்னையொரு புதுமலராக இலங்கச் செய்யும்.

நமப் பார்வதி பதே.

## பிரார்த்தனை (வேறு)

அருபத்தின் வித்தே! உன் அருள் என்னும் ஜோதியானது என் ஆத்மாவை தூய்மை செய்வதாக. உன்

அன்பு என் அறிவை வளர்ப்பதாக. நான் தொண்டுசெய்வோருக்கு என் செயல் அன்பின் பணியாகவும், அறிவொளியின் ஊற்ருகவும் இலங்குமாறு உன் பேரொளி எனக்கு ஊக்கம் தருவதாக.

பரோபகார சித்தனே! பாரில் பாவ கிரக தோஷங்கள் என்னைத் தொடர்ந்து துன்புறுத்தா வண்ணம் என் மீது பட்சம் வைத்தருளும். காமம், குரோதம், பொருமை, சூது ஆகியவைகளால் என் நெஞ்சு நெகிழ்ந்து விடாதவாறு பாதுகாத்தருளும். சுவாமி உனது உண்மை என்னும் பேரொளியானது, என் சக்தியை ஆக்கம் தரும் அறநெறிகளிலும், உத்தம கிரியைகளிலும், சற்குணச் செய்கைகளிலும் செலவிட நித்தம் கிருபை பாலிப்பீராக.

ஓம் சாந்தி.
சாந்தி சாந்திஹி.

## இராமலிங்க வணக்கம்.

போதம் அழித்து வாழ்வெழிலைப்
புசித்து கொழுத்த புன்மையிருட்
பேதப் பேயின் வன்னெஞ்சைப்
பிளந்து புவியெல்லாம் உதய
கீதம் ஒலிக்கத் தமிழமுதக்
கிரணம் பரப்பி எழுந்த அருட்
ஜோதி இராம லிங்க மணிச்
சுடர்த் தேன் கமலத் துணை போற்றி.

தில்லைப் பெருமாள் நடன கலைத்
தேனைப் பருகித் திசை தோறும்
கல்லும் கனியப் பட்ட மரம்
துளிர்த்துக் காய்க்க காட்டு விலங் (கு)

எல்லாம் அசையா துருகி நிற்க
இரும்பும் கரும்பாய் இனித்திளக
வல்ல தெய்வத் தமிழிசைத்த
வள்ளற் றினையார் வையகத்தே.

தண்ணீர் சொரிந்து விளக்கெரித்த
சக்திப் பிழம்பே நெஞ்சுருகி
கண்ணீர் சொரிந்து பேரின்பக்
காடு வளர்த்த கற்பகமே
உண்ணீர் என்று நள்ளிரவில்
உலகத் தாய் வந் தமுதூட்டப்
பண்ணும் உனது தவந்தானென்
பக்தித் தவத்தின் பாவேந்தே.

கோடி கோடிச் சமய மெல்லாம்
கொட்டி யளந்தும் எட்டாமல்
ஓடிப் படர்ந்த பே ரொளியை
உள்ளம் உருக்கும் செந் தமிழால்
பாடிப் பாடிப் பர வசமாய்
பக்திக் காதல் வெளியினிலே
கூடிக் கலந்து சுவைத்தின்பம்
கொழிக்கும் ஜோதிக் குயில் வாழ்க.

ஒருப் பாடமைந்து சாதி மத
உயர்வு தாழ்வு மனப் பேத
இருட்பா டொழிந்து புவி யெல்லாம்
இன்புற் றிருக்கப் பேரிறைவன்
அருட் பாலெங்கும் பொங்கிட நம்
அமிழ்தத் தமிழ்த் தாய் வாழ் வோங்க
அருட் பா வொளித் தேன் மொழிந்திட்ட
அருட் பிரகாசன் வாழியவே.

## தந்தை தாய் பேண்.

இப்புவியில் எனை யீன்று இன்றுங் காத்து
இறைவனடி இது வென்று விளக்கிக் காட்டி
சத்தியமாம் நீதி நெறி தன்னை யூட்டி
அடியேனைக் காத்து வரும் தந்தை தாயே.

சிந்தையதில் சிறந்த மதி தனை வளர்த்து
சித்திக்கும் சக்தி மயம் தன்னைக் காட்டி
சமய மெலாம் ஒரு நெறி யென் றுணரச் செய்த
அப்பனே! அம்மா உமக் கடிமை நானே.

அறிவென்ற பொருளதனை உருவாய் ஊட்டி
அற்புதமாய் நல் நெறியில் எனை வளர்த்து
ஆளாக்கி மேலாக்கி அறிவைத் தந்து
தனையறிய வழி வகுத்த தந்தை தாயே.

அழியாத தமிழமுதக் கடலதனில்
அடியேனை அமிழ்த்தி நல்நாவும் தந்து
அன்னை சரஸ்வதியின் துணை வேண்டச் செய்து
அறிம்மை வழி வாழ் வளித்த தந்தை தாயே.

அன்பு சால் அப்பா! அம்மா
அடியேனைப் பெற்ற பேறு
பலன் யாது செய்வேன் அந்தோ
பணிவு சால் அன்ப தல்லால் படித்துறை வேறறியேன்.

## மயங்காதே.

மயங்காதே—மகிழ்ச்சியைக் கண்டு நீ
மயங்காதே மதி மயங்காதே

இளமையின் எழிலில் இதயம் தாங்கி
ஏங்காதே—அது
நிழலைப் போலே இருளாய்ப் போகும் —மயங்

வெளி அழகைக் கண்டு நீ மயங்காதே யது
அழியும் சாதனம் பார்—உன்
ஆசை யெல்லாம் வீணதாகும் —மயங்

மாறி மாறித் தோன்றும் இந்த மாரி போலவே
உந்தன் வாலைப் பருவம் நாளை மாறும்
அழகை நாடாதே—வீணாய் —மயங்

ஆணவம் பேசி வீணில் வீரம் காட்டாதே
உன் வலிமை யிழந்தால் சோகம் கொள்வாய்
மயங்காதே—பெல வீணங் கொள்வாய் —மயங்

## கவலை கொள்ளாதே நெஞ்சே.

கவலை கொள்ளாதே நெஞ்சே—உன்
துன்ப மெல்லாம் ஒருநாள் இன்ப மதாகும்

பெரு மலைக் கடலிலும் அமைதியின் சாயல்
நிலவுதல் காண் கிலேயோ நெஞ்சே
பாரி லுயிர்க்கும் பரந்த காரி ருட்கும்
களிப் பது தரவே கதிரோன் வருவான் —கவலை

நெஞ் சிருள் நீங்கவும் நின் துயர் போக்கவும்
துன்பந் தொலையவும் இன்பம் பெருகவும்
சூர சம் ஹார ன் மங்கை மணாளன்
சூட் ஷாம மாய் வந்தே இன்பந் தருவான் —கவலை

## சிவா சிவா சிவாநந்தா.

சிவா சிவா சிவாநந்தா

உலகைப் படைத்த சிவா—எனக்
குயர் ஞானத்தை தாரும் சிவா —சிவா

அகிலம் படைத்தாய் சிவா—எனக்
கருள் வாசத்தைத் தாரும் சிவா —சிவா

மட்டில்லா எந்தன் சிவா—எனக்
குற்ற மடைமையைப் போக்கும் சிவா —சிவா

அன்பே எந்தன் சிவா—எனக்
கார் துணை யாவார் சிவா —சிவா

மும் மூர்த்தி யான் சிவா—எனக்
கொரு முத்தி வழி தா சிவா —சிவா

கைலாச மான சிவா—எனக்
குந்தன் கருணையைக் காட்டும் சிவா —சிவா

பர மானந்த மான சிவா—எனக்
கொரு பே ரானந்தம் தாரும் சிவா —சிவா

எங்கும் நிறைந்த சிவா—எனக்
கின்ப வாசத்தை தாரும் சிவா —சிவா

காரும் சிவா என்னைப் பாரும் சிவா—எனக்
குற்ற துணையாக வாரும் சிவா —சிவா

நேச முடன் அன்பு தாரும் சிவா—எனக்
கிட ரேதும் வாராது காரும் சிவா —சிவா

சிவ நாமத்தையே.

சிவ நாமத்தை யே துதி செய்—நீ மனமே
சிவ நாமத்தை யே துதி செய்.

நீ எண்ணிய எண்ணங்கள் யாவும் ஜெயிக்க
இன்ப சுகத்துடன் வாழ்ந்து சீவிக்க —சிவ

அன்பின் பிறப்பிடம் அருளின் இருப்பிடம்
ஓம் என்ற நாதத்தின் உண்மை உறைவிடம் —சிவ

கருணையின் பாசன் கழுத்தணி ஷேடன்
கங்கை யைத் தாங்கிய கமல விலாசன் —சிவ

நீ செய்த பாவங்கள் யாவும் துலைக்க
விண்ணிலும் மண்ணிலும் உன் புகழ் நிலைக்க —சிவ

மாசற்ற சக்தியின் மறுவற்ற நாதன்
மண்ணுள்ள சிருஷ்டியின் மட்டில்லா நேசன் —சிவ
சிவ நாமத்தை யே துதி செய்—மறவாதே
அந்த நாமத்தையே அணி செய் —சிவ

## கலை வாணி.

கலை வாணி யுன் நேசம்
தஞ்ச மென் றோடி வந்தேன் —கலை
நீ யல்லால் எந்தனுக் கார் துணை வருவார்
உண்மை யிது உண்மையே — கலை
வீணையின் நாதம் நீ நாதத்தின் கீதம் நீ
நல்லோர் அறிவும் நீயே —கலை
சின்னக் குழந்தை நான் கெஞ்சி யழைக்கின்றேன்
கேட்கலையோ தாயே —கலை
பாலன் குழந்தை நான் பாடி யழைக்கின்றேன்
பரா முகம் என் தாயே —கலை
வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் தாயே
என் உள்ளக் கமலத்தே வா —கலை
கலையின் அரசி நீ காவிய பாசம் நீ
கருணை செய் என் தாயே —கலை
எந்தன் கலை முன்னே இட ரேதும் வாராமல்
இன்பக் கலை அருள்வாய். —கலை

## ஆ ஹா வாரும்.

ஆஹா! வாரும் நா மெல்லாரும் கூடி
வாழ்த்திப் பாடுவோம்—சற்றும்
களங்க மில்லா கலை ராணியைப்
போற்றிப் பாடுவோம் —ஆஹா

பாலர் நாங்கள் பகுத்தறிவின் மேலாயோங்கவே--இந்தப்
பாரினில் கலையின் திரு அவதார மாயினள் —ஆஹா
மானிலத்தில் மடமையுற் றுளரும் எமக்கே—மிக்க
மதியை யூட்டும் மங்கையின வதாரமாய் வந்தாள்—ஆஹா
நானிலத்தில் நலிவடைந்த எமையீடேற்றவே—வெள்ளைக்
கமலத் திலே கலையின் வீணை கரத்தி லேந்தினள்—ஆஹா
நெஞ்சினிலே நிறை கலையை நிலை நிறுத்தவே—இந்த
நீனிலத்தில் நித்தம் கலை அமு தளித்திடுவாள் —ஆஹா

அன்பே என் சிவனே.

அன்பே என் சிவனே! அருளாளா என் பரனே
முத்திக்கு நல் வழியே முடி வில்லாத மெய்ப் பொருளே
ஏழை யான் வேண்டுகின்றேன் ஏனோ பராமுகம்தான்
ஐயா! உன்னை யல்லால் எனக் கார் துணையாய் வருவார்.

தாயார் தந்தை யுடன் உறவு குரு முதலாய்
நீயே யெனப் பணியும் என்னில் ஏனோ பராமுகந்தான்
வஞ்சகர் தன் வலையில் நான் வருந்தும் இன்னேரமதில்
அப்பா! உன்னை யல்லால் எனக்கார் துணையாய் வருவார்.

கவலைப் பெரு மாழியில் கரை காணாத தீய னென்னை
கரை சேர்த்தருள்வீர் என்றே கருவாக்கினீர் இப்புவியில்
பொல்லா வினை களெல்லாம் (எனைப்) புடைசூழு மின்னே
[ரமதில்
ஐயா! உன்னை யல்லால் எனக்கார் துணையாய் வருவார்.

மாயா லோக மிதில் என்னை மானிடனாய் படைத்த
தோஜோ மயானந்தனே என்னை ஈடேற்றும் அருளே
பொல்லாத் துயரை யெல்லாம் போக்கி யெனைக் காரும்
அப்பா! உன்னை யல்லால் எனக்கார் துணையாய் வருவார்.

கள் காமம் கொலை களவும் மற்றும் பல வினையும்
என்னைத் தொடராமல் காத்தருளும் சிவனே
அகிலம் பெருமாயை (எனை) ஆட்கொள்ளு மென்னருளே
ஐயா! உன்னை யல்லால் எனக் கார் துணையாய் வருவார்.
பொய்யான இவ் வுடலில் புகழான உயிரளித்தீர்
எல்லாம் மாயை யதாய் தோன்றுகுதே மகிழ் காணேனே
ஏனோ எனைப் படைத்தீர் வேண்டேனிப் பொய்யுடலம்
அப்பா! உன்னையல்லால் எனககார் துணையாய் வருவார்.

## நீரே பெருமான்,

நீரே பெருமான்—எனக் கென்றும்
நீரே பெருமான்

என் துன்பப் படுகுழியைத் தவிர்த்தும்
பாவ வினை யாவையுமே துலைத்தும்
இப் புவன மீதென்னைக் காக்கும் —நீரே

எனதகக் கவலைக் கடலதனை நீந்த
என் முன் கட்டு மர மாகி யுடன் வருவீர்
பொல்லாக் கடலிருந் தெனைக் கரை யேற்றும் —நீரே

பாருலகில் பாவி நான் செய்த
பொல்லாப் பல குற்றம் யாவையும் நீக்கி
பே ரின்ப சுவர்க்க மெனைச் சேர்க்கும் —நீரே

உந்தன் திரு விளையாட லிந்த உலகம்
உண்மை அறி வென்றும் ஒளி உன்தன் ரூபம்
என்னைக் காத்துக் கரை யேற்றும் சிவ தீபம் —நீரே

## கலை மகளே.

கலை மகளே திரு மகளே வா வா சரஸ்வதி—கலை
வருந்தி உனை யழைக்கின்றேன்
வா வா சரஸ்வதி நீ வா வா சரஸ்வதி.

கம்பன் உள்ளம் கொள்ளை கொண்டாய் தாயே சரஸ்வதி
காவியத்தில் உள் ளுறைந்தாய்
ஆயே சரஸ்வதி! நீ வா வா சரஸ்வதி. —கலை

வீணைக் குள்ளே நாதமான தாயே சரஸ்வதி
தனி யிருந் தழைக்கின்றேன் நான்
தாயே சரஸ்வதி நீ வா வா சரஸ்வதி —கலை

என் நெஞ்சிலே நீ நிலைத் திருக்க வா வா சரஸ்வதி
கெஞ்சி யுன்னை வேண்டுகின்றேன்
தாயே சரஸ்வதி நீ வா வா சரஸ்வதி —கலை

ஆருமற்ற பாவி யம்மா ஆயே சரஸ்வதி
என் அன்பு நெஞ்சில் அமர்ந் திருக்க
வா வா சரஸ்வதி நீ வா வா சரஸ்வதி —கலை

என் நெஞ்சிலே நீ வீணையாக வீற்றிருப்பாய் சரஸ்வதி
என் நாவினிலே நல் விருந்தாய்
வந்தமர்வாய் சரஸ்வதி நீ வா வா சரஸ்வதி —கலை

நாமகளே பா மகளே நல்லமுதே சரஸ்வதி
யான் கூவும் குரலில் குடியிருக்க
வா வா சரஸ்வதி நீ வா வா சரஸ்வதி —கலை

## கருணை செய்வாய்.

கருணை செய்வாய் கலைவாணி
ஏழை யென் மீதிரங்கி —கரு

பாருலகில் பாவி நான் பாடிப் பிழைக்க எனினும்
பரா முகம் காட்டாது பாவி யென் மீதிரங்கி —கரு

ஏதற் கெடுத்தாலும் நான் ஏங்கித் தவியாது
ஏழை யென் இதயத்துள் இடம் பெயராதிருந்து—கரு

அவலுடன் கடலை பாகுடன் பருப்பும்
அத்துடன் இதயம் முற்று முனதே —கரு

உன் அருள் இன்றி நான் உய்ய வழி வேறில்லை
வஞ்ச மின்றித் தாயே வந்தருள் தருவாய் —கரு

ஊணின்றேல் உன் புகழ் பாடி மகிழ்வேன்
உன் அருள் இன்றேல் என் உயிரையே தரியேன் —கரு

## முருகா.

முருகா! வேல் முருகா—எனைக்
காத்தருளும் வேல் முருகா.

வா வா முருகா வடி வேல் முருகா
வள்ளி மணாளா மங்கை பங்காளா —முரு

ஏழைகள் நேசா எழில் முக தேஜா
அன்புடன் என்னை நீ ஆண்டருள் பாஜா —முரு

கானகத் திருந் தின்பக் காட்சிகள் காட்டும்
கருணை விலாசா கடைக் கண் பார் நேசா —முரு

சூல குமாரா சூர சம் ஹாரா
சூழுலகத்தின் சூட்சும நேசா —முரு

## ஆறு முகம்.

ஆறு முக வேலா—என் அருமை அப்பனே
அகில மீதினில் உன்னை யல்லால்
எனக் கார் துணை வருவார் —ஆறு

பாருலகினிலே பாலன் குழந்தை நான்
பாதகர்கள் முன்னிலையில் பதுங்கி வாழ்வதா
அன்றிப் பயந்து வாழ்வதா —ஆறு

மானில மீதில் மறு உடலெடுத்து

மதியற்றோர்கள் முன்னிலையில்—மயங்கி வாழ்வதா
மதி மயங்கி வாழ்வதா —ஆறு
வாழ்வுலகமிதில் நான் மாளு முடலெடுத்து
வஞ்சகர்கள் முன்னிலையில் வசமிழந்து வாழ்வதா
என்னைத் துறந்து மாள்வதா —ஆறு

## சித்தம் தெளிய.

சித்தம் தெளியச் சிவ நாம மதை
சிந்தித் திடு மனமே—நீ —சித்
உந்தன் உறவும் உற்ற பொருளும்
நாடிய பணமும் நல மருளாதே
எண்ணுவ தெல்லாம் வீண் மாயை அறிவாய்
ஆன்ம ஈடேற்றம் அது தாராதே —சித்
ஆசைகள் யாவும் சோதனைத் துன்பம்
அதை வென்றாலே அடையலாம் இன்பம்
காண்ப தெல்லாம பொல்லா வேதனை அறிவாய்
கருணையுடன் பார் ஞான உலகை —சித்
அகிலமோ அந்தரம் ஆன்மா சுந்தரம்
அடைய முயல்வதே ஆன்மாவின் தந்திரம்
மாரியும கோடையும் மாறுவ தறிவாய்
நினைந்து நீ தேடிக் கொள் நித்திய பேரின்பத்தை— சித்
சோறின்றி உன் உடல் சோர்ந்திட்ட போதும்
சொத்தின்றி உன் அகம் வாடிய போதும்
துணையில்லை என்று நீ துயரங் கொள்ளாதே
புவியினில் அது ஒன்றும் நிலை நில்லாதே —சித்

## உலகில் தேவா.

உலகில் தேவா உனைக் காண
வழி யேதும் இல்லையா

ஓடி அலைந்தேனே ஓடி அலைந்தேனே!
உலகில் உன்னையே காணேனே
மானில மெங்கும் மாயை யென் றறிந்தும்
மடமை யினாலே அறிவிழந் தேனே —உல

உன் அருளால் உலகில் பிறந்தும்
எனை யறியாமலே ஏங்குகின்றேனே
உலக வாழ்வைச் சதமென நம்பி
உன்னை மறந்தேனே —உல

நிழலின் உருவை நிலையென நம்பி
நேர்மை இழந்தேனே—உன்
அருளை அறியும் வழி யறியாமல்
என் அறிவை இழந்தேனே —உல

கண்ணை இழந்த குருடனைப் போலே
உன் கருணை மறந்தேனே
தேவா உனைக் காணும்
கருணை காட்டாயோ கருணை —உல

கதிர்காமா.

ஏழு மலை மீதிருக்கும் கதிர் காமா—உந்தன்
எழி லழகை என்ன சொல்வேன் கதிர்காமா.

ஆனை முகனுக் கிளைய கதிர் காமா—உந்தன்
ஆண முகை என்ன சொல்வேன் கதிர்காமா.

மாணிக்கப் புன லோரம் கதிர் காமா—உந்தன்
மருட்சிகளை என்ன சொல்வேன் கதிர்காமா.

வள்ளிக்கு வாழ் வளித்த கதிர் காமா—உந்தன்
வடி வழகை என்ன சொல்வேன் கதிர்காமா.

சூரனைச் சம் ஹரித்த கதிர் காமா—உந்தன்
சூட்சுமத்தை என்ன சொல்வேன் கதிர்காமா.

ஆருமற்ற அனாதை யானேன் கதிர் காமா—என்னை
அணைந்து ஆதரித்துக் கொள் கதிர்காமா.

தொல்லுலகில் துயர் கொண்டேன் கதிர் காமா—எந்தன்
துன்பத்தை நீக்கி யருள் கதிர்காமா—கதிர்காமா.

## சக்தி! சக்தி!!

சக்தி! சக்தி!! சிவ சக்தி சக்தி!!!
சக்தி சக்தியே! சக்தி சக்தி!!

அறமது வளர நீ அருள் செய்வாய் தாயே
துயரெல்லாம் துலைந்திடத் துணை செய்வாய் நீயே
உனது சக்தியே உலகினியக்கம்
உண்மை உணர்ந்தேன்! ஆக்க மறிந்தேன்
உன் அருளை யான் என் சொல்வேன் சக்தி —சக்தி

உத்தம குணங்களில் சக்தியே சக்தி
உயரறம் வளர்த்துவா சக்தியே சக்தி
உனது சக்தியே என் ஜீவ ஆன்மா
உண்மை உணர்ந்தேன் ஆக்க மறிந்தேன்
என்னை அறியும் அருளைத் தா சக்தி —சக்தி

சிவனின் அருகமர்ந்த சக்தியே சக்தி
ஜீவனெல்லாம் ஜீவ சக்தியே சக்தி
என் சிந்தை நினைவெல்லாம் உன் ஜீவ சக்தி
தாயே நீ சக்தி தந்தருள் முக்தி
பரா சக்தி நீயே என் சக்தி —சக்தி

## ஓடுவோம்.

ஓடுவோம் வாருங்கள் முருகனிடம்
ஒரு மனதுடன் இன்ப

அருள் வரம் வாங்கிட
ஓடுவோம் வாருங்கள் முருகனிடம்—தொடர்ந் —ஓடு
துன்பந் தீரவே தொல்லை நீங்கவே
தந்தி முகன் தம்பி தனி மயில் வீரனிடம் —ஓடு
பக்தி யுடனே நாம் பாடி மகிழுவோம்
பரம தயாளனை வள்ளி மணாளனை—தேடி —ஓடு
கவலை நீங்கவே களிப்புப் பொங்கவே
கருணை விலாசனை கன்னி மணாளனை தேடி —ஓடு
அரோகரா என்றே அறை கூவி அழைத்துமே
அறம் வளர் வரங்களை அன்புடன் வாங்கிட —ஓடு
இன்பம் பொங்கவே இகபர சுகங்கள் ஓங்கவே
செல்வம் கொழிக்கவும் செந்நெல் செழிக்கவும் —ஓடு

## நமோ க்ருஷ்ண.

நமோ க்ருஷ்ண நமோ க்ருஷ்ண
நமோ நமோ நமோ க்ருஷ்ண

க்ருஷ்ண நமோ க்ருஷ்ண நமோ
நமோ நமோ க்ருஷ்ண நமோ —நமோ

நமோ நந்தா நமோ நந்தா
நமோ நமோ யது நந்தா —நமோ

ஆதவ குல தேவகி மைந்தா
நமோ நமோ யது நந்தா —நமோ

தேவகி ஜெய ராம க்ருஷ்ண
நமோ நமோ ஜெய நமோ —நமோ

ஆதி சேஷஷ சேஷம ராமா
நமோ ஜெய நமோ நமோ —நமோ

ஜெய க்ருஷ்ண ஜெய க்ருஷ்ண
ஜெய ஜெய ஜெய ஸ்ரீ க்ருஷ்ண —நமோ
ஸ்ரீ க்ருஷ்ண ஸ்ரீ க்ருஷ்ண
ஜெய ஜெய ஜெய ஸ்ரீ க்ருஷ்ண—ஜெய —நமோ

## ஓம் கஜபதி.

ஓம் கஜமுக
ஓம் கஜமுக ஓம் கஜமுக ஓம் —ஓம்

எங்கு நோக்கினும்
அங்கே முன் நிற்பாய்
ஓம் கஜமுக ஓம் —ஓம்

சிவனின் மைந்தனாய் சக்தியின் சித்தமாய்
வித்திற்கு முன் வருவாய்
ஓம் கஜமுக ஓம் —ஓம்

ஆலமரத்தடியில் அரியாசனம் போட்டிருப்பாய்
அண்டி வருவோர்க்கு இன்பம் பலதரும்
ஓம் கஜமுக ஓம் —ஓம்

கையில் வேல் பிடித்த மயில் வேல் முருகனை
மண்டலம் சுற்ற வைத்தாய்
ஓம் கஜமுக ஓம் —ஓம்

மாங்கனிக்காகவே மயில் வடி வேலனை
மண்டலம் சுற்ற வைத்தாய்
ஓம் கஜமுக ஓம் —ஓம்

## சக்தி விருத்தம்.

அவனியில் நீக்கும் ஆன்மா அன்புடன் சிறந்து வாழ்க
விளங்க நல் வளங்க ளெல்லாம் பெருக நல் இன்பமெல்
[லாம

அதர்மங்கள் அழிந்தகிலத் தேயங்கள் அன்பி லோங்க
வினை பொருட் சிறப்பினோடு விடுதலை சிறந்து வாழ்க.

அறியாமை நீங்கி வையம் அறிவினில் சிறந்து வாழ்க
பொறாமைகள் ஒழிந்து புவி பொறுமையில் திகழ்ந்து
[வாழ்க

வறுமைகள் ஒழிந்து வையம் வளம் பல பெருகி வாழ்க
குணமுடன் துதிக்கின்றேனே துணை செய்வாய் சக்தி
[தாயே

அன்போடு அறமும் மற்றும் அருமறைச் சமய மெல்லாம்
ஆன்ம ஜோதி போல வாழ அருள்செய்வாய் சக்தி தாயே
துன்பங்கள் ஒழிந்து வையம் இன்பத்தில் களிக்க நாளும்
அன்புருவான சக்தி உன் பொன்னடி துதிக்கின்றேனே.

கணிகையர் கற்பதோங்க களவியல் ஊடல் சாக
நெறியுடன் மாதர் தங்கள் நேர்மை மேலோங்கி வாழ்க
தூய நல் மதிகள் பெற்று தீய செய்கைகளற்று
தீமைகள் தேய்ந்து வாழ துணை செய்வாய் சக்தி தாயே.

ஓம் சாந்தி.

சாந்தி சாந்திஹி.

நமப் பார்வதி பதே.

# பொன் மொழிகள்.

சகிக்க முடியாத கோபம் உன் மனதில் தோன்றும்போது உன்னை நீ சாந்தப்படுத்திக் கொள்வது தான் மனிதத் தன்மை. அதுவே உன் பிறவிப்பயனும் கூட.

உனது நலனுக்காக நீ ஒரு உயிரை நிந்திக்க, நிர்ப்பந்திக்க, கொலை செய்ய அல்லது அதற்கு நிகரான ஆக்கினை செய்ய விரும்புகிறாயா? அப்படியானால்! நீ துணியும் அதேசெயலை உனக்கு இன்னொருவர் செய்ய நீ சகிப்பாயா? இதைச் சிந்தித்துப் பார்.

உன் உயிரை மகிழ்விக்க அல்லது திருப்திப்படுத்த இன்னொரு உயிரை பலியிடாதே.

ஒருநாளைக் கொருதரம் மனம் இல்லாவிட்டாலும், பத்து நாளைக் கொருமுறை யாகிலும் உன் பெற்றோரை பக்தியுடன் வணங்கிக்கொள்.

நீ அனுபவிக்கும் பலநாளைத் துன்பத்தைக் கண்டு பயப்படாதே! ஆனால், நீ சில நிமிஷங்களுக்கு அனுபவிக்கும் இன்பத்தைக் கண்டு பயப்படு.

பொறுமை என்பது ஒரு உடமை. அதைப் போற்றுவது மனிதர் கடமை.

ஆசை என்ற வித்துக்கள் அதிகம். அதில் அபூர்வமானது பொறுமை, கடமை, தாம்பத்தியம்.

பேரின்பத் தேன்

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

முருகா உன்னை நம்பினேனையா பன்னிருகையா
முருகன் மால் மருகன் முத்துக்குமாரன்
வள்ளிக்கு வாய்த்த மனோஹரனே
திருமாலுக்குகந்த திவ்ய ரட்சகனே
ஆறுமுகதேவனே அன்பே ஷண்முகனே
முருகா சரவணபவனே கார்த்திகேசா
முக்கணனார் புத்திரனே உக்ரவேலா
மாதரசி பாடியதை மர்ம மதாய் ஏற்றிடுவாய்

**க. வைத்தியலிங்கம்**
நாவலர் கோட்டம்,
வண்ணார்பண்ணை,